**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். STC 544/2023**
**வழக்கு சாட்சி. அ.சா.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | பால்ராஜ் | **வயது** | : | 49/2026 |
| **தந்தை பெயர்** | : | அடைக்கலம் | **தாலுகா** | : | அறந்தாங்கி |
| **கிராமம்** | : | நாகுடி | **தொழில்** | : | தலைமை காவலர், நாகுடி காவல் நிலையம் |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**Accused present. Both side Counsel Present.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**தேதி : 05.03.2026**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்போது நாகுடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நாகுடி காவல் நிலையத்தில் இவ்வழக்கினை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் மருதமுத்து என்பவர் பணிமாறுதல் பெற்று வேறு மாவட்டத்திற்கு சென்றுவிட்டார். அவரது எழுத்து நடை மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு நீதிமன்ற அனுமதியுடன் எதிரி தரப்பில் ஆட்சேபனை இன்றி ஆவணங்களை பார்வையிட்டு அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 19.09.2022 ஆம் தேதி உதவி ஆய்வாளர் மருதமுத்து நிலைய பொறுப்பில் இருந்தபோது அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கார்த்திக் த/பெ.ஜெகன்நாதன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.196/2022, இ.த.ச. பிரிவுகள் 279, 337 இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் உதவி ஆய்வாளர் மருதமுத்து 20.09.2022 அன்று 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் விஜய் மற்றும் வீரமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு **மாதிரி வரைபடம், பார்வை மகஜர்** ஆகியன தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.-3** ஆகவும், **பார்வை மகஜர் அ.சா.ஆ.-4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையுள்ள சாட்சிகளை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை

தனித்தனியே பதிவு செய்துள்ளார். அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.விவேகானந்தர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். அ.சா.1 இன் **காயச்சான்றிதழ் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மோட்டார் வாகன ஆய்வாளர் சசிக்குமார் என்பவரையும் விசாரித்து வழக்கில் தொடர்புடைய TN 55 AZ 8571 மற்றும் TN 65 W 8786 பதிவெண் கொண்ட வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்றுள்ளார். TN 55 AZ 8571 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.6 ஆகவும்,** N 65 W 8786 பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.7 ஆகவும்** குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை 11.12.2022 அன்று காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார். அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் சான்று வழங்கியிருப்பதால் இவ்வழக்கின் சட்டப் பிரிவுகளை 279, 337 இ.த.ச. விலிருந்து 279, 338 இ.த.ச. ஆக மாறுதல் செய்து **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக **279, 338 இ.த.ச.** பிரிவுகளின் கீழ் 31.01.2023 அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால், சரியல்ல. அ.சா.1 கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் கையிருப்பு சாட்சிகளை வைத்து காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால், சரியல்ல. எதிரிக்கம் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல. நான் சொன்னன தேதியில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/-எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**